## சிறுநில உடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2015

சிறுநில உடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜிஓஎஸ்எல்) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎப்ஏடி) இடையே கைச்சாத்திடப்பட்ட 2007 மே 08 ஆந் திகதிய 712-எல்கே இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் அமுலாக்கும் முகவராகவும் உள்ளது. (அ) நலன்பெறுனர்களின் நிறுவகரீதியான இயலுமையையும் இணக்கப்பாட்டு திறன்களையும் வலுப்படுத்தல் (ஆ) சிறுநில உடமைத் தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களின் காணி உரிமை அந்தஸ்தை மேம்படுத்துதல் (இ) உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களை முன்னேற்றகரமான அறுவடைக்குப் பிந்திய கையாளல், களஞ்சியப்படுத்துதல், செயன்முறைப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் என்பவற்றினூடாக அவர்களின் இலாபத்தை அதிகரித்தல் (ஈ) கிராமிய நிதி மற்றும் கடன் சேவைகளை அபிவிருத்தி செய்தலும் விரிவுபடுத்துதலும் (உ) மகளிர் தங்களுடைய வாழ்க்கை நிலையை மேம்படுத்துதலையும் அவர்களின் தற்போதைய வறுமையைக் குறைப்பதனையும் உறுதிப்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 3,827.82 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்.டொலர் 29.22 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 2,954.05 மில்லியனிற்குச் சமமான யூஎஸ்.டொலர் 22.5 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் வழங்குவதற்கு உடன்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டம் தனது நடவடிக்கைகளை 2007 நவம்பர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள்

அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கும் மற்றும் ஐஎப்டீஏ இன் வழிகாட்டிகளுக்கும் இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில்

உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 திசெம்பர் 31 வரை நிகழ்ச்சித்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 378.24 மில்லியன் பெறுமதியான சிவில் வேலைகளையும் ஏனைய நிலையான சொத்துக்களையும் நடைமுறையற்ற சொத்துக்களாக தனியாகக் காட்டுவதற்குப் பதிலாக அவைகள் நிகழ்ச்சித்திட்ட செலவின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

நிகழ்ச்சித்திட்டத்தின் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பவை மீதான வருடாந்த மெய்மையாய்வுச் சபையானது நிதிப்பிரமாணங்கள் 756 இல் வேண்டப்பட்டவாறு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளித்தல், பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2015 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் — மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் — 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐஎப்ஏடி | 22.55 | 2,954.05 | 350.60 | 2.24 | 304.67 | 18.76 | 2,229.21 |
| ஜிஒஎஸ்எல் | 3.76 | 492.56 | 49.40 | - | 32.09 | - | 181.26 |
| பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் | 1.90 | 248.90 | 15.85 | - | 21.15 | - | 106.12 |
| நலன்பெறுனர் பங்களிப்பு | 1.01 | 132.31 | 30.00 | - | 43.48 | - | 176.29 |
| வெலஸ்ஸ இறப்பர் கம்பனி | - | - | - | - | - | - | 2.00 |
| | 29.22 | 3,827.82 | 445.85 | 2.24 | 401.39 | 18.76 | 2,694.88 |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

சமூக அபிவிருத்தி, காணிப்பாவனை, கிராமியச் சமூகத்தின் உற்பத்திப் பொருட்களுக்காக பெறுமதி சேர்த்தலை மேம்படுத்துதல், கிராமிய பிரதேசங்களிலுள்ள தொழில்முயற்சிகளுக்கான கடன் வசதிகளை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் மத்திய மலைநாட்டுப் பகுதியில் உள்ள கண்டி, நுவரெலியா மற்றும் கேகாலை மாவட்டங்களிலுள்ள 07 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொனராகலை மாவட்டத்தில் 30 இறப்பர் செயன்முறைப்படுத்தல் நிலையங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 23.86 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 12 நிலையங்களின் நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எனினும் இறப்பர் தட்டுக்களைத் தயாரித்தல் மீளாய்வாண்டின் போது 03 நிலையங்களில் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இறப்பர் உற்பத்திப் பொருட்கள் மீதான குறைவான சந்தை விலை, பெரும்போக காலத்தில் நெல் அறுவடை நடவடிக்கைகளுக்காக விவசாயிகளின் காலத்தை ஒதுக்குதல் என்பவற்றின் காரணமாக இறப்பர் செயன்முறைப்படுத்தல் நிலையங்களின் நிர்மாணத்திற்கான சமூகப்பங்களிப்பானது திருப்தியற்றதாகக் காணப்பட்டது.

(ஆ) குடிநீரை வழங்குவதற்கு மொனராகலை மாவட்டத்தில் ரூபா 2.44 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 12 கிணறுகள் குடிப்பதற்கு தரம் குறைந்த நீராக உள்ளதனால் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது

2016 மார்ச்சில் கணக்காய்வாளர்களால் மேற்கொண்ட களப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2013 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொனராகலை மாவட்டத்திலுள்ள 08 பிரதேச செயலகங்களிலுள்ள இறப்பர் சிறுநில உடமையாளர்களுக்கான உதவுதொகை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம் 2015 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 499.06 மில்லியன் தொகையான உதவுதொகைகள் வழங்கப்பட்டிருந்தன. காலநிலை மாற்றங்கள் மற்றும் வரட்சி காலங்களில் ஏற்பட்ட தீயின் காரணமாக 323 சிறுநில உடமையாளர்களுக்குச் சொந்தமான 435 ஏக்கர் காணிகளிலுள்ள புதிய பெருந்தோட்டங்கள் வெற்றியளித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது. அவை தொடர்பாக ரூபா 15.72 மில்லியன் தொகையான உதவு தொகைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் கிராமிய நிதி மற்றும் கடன் கூறின் கீழ் வருமானத்தை தோற்றுவித்தல் நடவடிக்கைகள் தொடர்பாக கிராமிய சமூகங்களுக்காக சலுகைக் கடன் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களிலுள்ள 06 பங்குபற்றும் நிறுவனங்களினால் 158 உப கடன்களின் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட ரூபா 140.11 மில்லியன் மொத்த பணவளிப்புக்களில் 87 உப கடன்களின் கீழ் ரூபா 63.98 மில்லியன் தொகையான பணவளிப்புக்கள் ஒரு உத்தரவு பெற்ற விசேட வங்கியினால் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட 158 மொத்த உப கடன்களில் 140 உப கடன்களை அரசாங்கத்திற்குச் சொந்தமான உத்தரவுபெற்ற வங்கிகள் வழங்கியிருந்தமையானது கடன் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தனியார் துறையிலுள்ள உத்தரவுபெற்ற வங்கிகளினால் முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது. மேலும் கடன் திட்டமானது இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்படுவதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் தகுதியான நலன்பெறுனர்களுக்கு உப கடன்கள் வழங்கப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தினால் முறையான பொறிமுறை ஒன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டத்தினால் அமுல்படுத்தப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் கொத்மலையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 7.5 மில்லியன் சலுகைக் கடனில் ரூபா 4.3 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் சம்பந்தப்பட்ட புனரமைப்பு வேலைகள் கைவிடப்பட்டிருந்தன.

(ஊ) மத்திய மாகாணத்திலுள்ள 54 கிராம உத்தயோகத்தர் பிரதேசங்களிலும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 15 கிராம உத்தியோகத்தர் பிரதேசங்களிலும் 243 சமூக தொழில் முயற்சியாளர் குழுக்களையும் 248 சேமிப்பு மற்றும் கடன் குழுக்களையும் நிகழ்ச்சித்திட்டம் தாபித்திருந்தது. எனினும், அவ்வாறான சமூக அமைப்புக்களின் தொடர்ச்சியான செயற்பாடுகள் மீதான ஆபத்தினை கணக்காய்வில் நிராகிக்க முடியாதுள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையின் பிரகாரம் 37 சமூக தொழில்

முயற்சியாளர் குழுக்களும் 27 சேமிப்பு மற்றும் கடன் குழுக்களும் சுயாதீன கணக்காய்விற்கு உட்பட்டிருந்ததுடன் அவற்றில் 19 சமூகதொழில் முயற்சியாளர் குழுக்களும் 14 சேமிப்பு மற்றும் கடன் குழுக்களும் மாத்திரமே தங்களின் செயற்பாடுகளின் நிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்தியிருந்தன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொனராகலை மாவட்டத்தின் விவசாயிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட கலப்பு சோள விதைகளை விநியோகிப்பதற்கு மொனராகலையிலுள்ள நிகழ்ச்சித்திட்ட உப அலுவலகம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அவற்றின் 02 வகையான விதைகளை கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருந்தது. எனினும், அதிக விலை கோரப்பட்ட எஸ்ஏ 501 வகையான விதைகளிலிருந்து முழு வேண்டுதல்களான 3,500 கிலோ கிராம் விதைகளை ரூபா 3.39 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பிஜஎஸ்ஜ 222 வகையான குறைந்த விலையுள்ள விதைகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொனராகலை மாவட்டத்தில் வன பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட வலயத்தை குறியீடு செய்வதற்கு நிகழ்ச்சித்திட்டத்தினால் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் குறைவான செயல்முன்னேற்றத்தைக் காட்டியது. மீளாய்வாண்டின் போது ரூபா 01 மில்லியன் முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 1500 எல்லைத் தூண்களில் 345 எல்லைத் தூண்களே நிறுவப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(இ) மொனராகலை மாவட்டத்தில் கிராமிய இறப்பர் கொத்தணிககளை வலுப்படுத்துவதன் மூலம் சுய வேலைவாய்ப்பு நோக்கங்களுக்காக ஒவ்வொருவருக்கும் ரூபா 50.000 வரையான மானியங்களை வழங்குவதற்கான நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 2.43 மில்லியன் கிரயத்தில் ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நலன்பெறுனர்களுக்கு ரூபா 5.82 மில்லியன் கூட்டுமொத்தமான மானியங்கள் 120 நலன்பெறுனர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தன. மானியங்களின் நிர்வாகக் கிரயம் 41.6 சதவீதமாக மிக உயர்வாக இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டது. நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளரினால் வழங்கப்பட்ட விளக்கமளித்தல்களின் பிரகாரம் சேவை வழங்கும் கம்பனியானது நலன்பெறுனர்களைத் தெரிவு செய்வதில் ஈடுபடுவது மாத்திரமின்றி கிராமிய இறப்பர் அபிவிருத்தி கொத்தணிகள், தொழில் முயற்சியாளர்கள், வணிக அமைப்புக்கள் என்பவற்றை வலுப்படுத்துவதிலும் எதிர்கால சந்தை வாய்ப்புக்களை வெளிக்கொணர்வதிலும் ஈடுபடுகின்றது.

**3.4 நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள்**

மொனராகலை மாவட்டத்தில் சிறு நடுகை தொழில் முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் உப அலுவலகத்திலிருந்து மானியங்களை வழங்குதல் மீதான நிதிக் கட்டுப்பாடுகள் திருப்தியற்றதாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் காலரீதியான முற்பணங்களைக் கையாள்வதற்குப் பொறுப்பாக இருந்த இறப்பர்

அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்காளர் மொனராகலையிலுள்ள திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தின் கணக்காளராகவும் செயற்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்ட உப அலுவலகத்தினால் வழங்கப்படுகின்ற மானியக் கொடுப்பனவிற்கான சான்றுபடுத்தும் உத்தியோகத்தராகவும் செயற்படுகின்றார்.

### 3.5 பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேசத்திலுள்ள விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக மதுரகெட்டியவில் ரூபா 1.52 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் 03 கடைகளில் 02 கடைகள் உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 27 இறப்பர் செயன்முறைப்படுத்தும் நிலையங்களை பயன்படுத்துவதற்காக மொனராகலையில் நிகழ்ச்சித்திட்ட அலுவலகத்தினால் ரூபா 4.55 மில்லியன் கிரயத்தில் 2014 இல் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் ஒரு வருடத்திற்கு மேலாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(இ) 2011 யூலை 05 ஆந் திகதி ரூபா 4.60 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் 2011 நவம்பர் 19 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி பின்னர் பயன்படுத்த முடியாததாக ஒதுக்கி வைக்கப்பட்டதுடன் தேயிலைச் சிறுநில உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் வளவில் காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளரின் கூற்றின் பிரகாரம், சாரதியின் ஒழுங்கீனத்தின் காரணமாக விபத்து ஏற்பட்டதனால் அது தொடர்பான காப்புறுதிக் கோரிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது.